செ.வெ.எண் : 27/ஜுலை நாள் : 24.07.2020

# இராமநாதபுரம் மாவட்டம்

## மனை பிரிவு ஒப்புதல் மற்றும் கட்டிடங்களுக்கான தொழில்நுட்ப அனுமதி பெற நகர் ஊரமைப்புத்துறை அலுவலகம் செயல்படுகிறது மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களுக்கான நகர் ஊரமைப்புத் துறையின் மண்டல அலுவலகம் சிவகங்கை மாவட்டத்தில் செயல்பட்டு வந்தது. இத்துறை சம்பந்தப்பட்ட பணிகளான மனை பிரிவு ஒப்புதல் மற்றும் கட்டிடங்களுக்கான தொழில்நுட்ப அனுமதி பெற வேண்டும் என்றால் சிவகங்கை மண்டல அலுவலகத்தில் விண்ணப்பிக்க வேண்டிய நிலைமை இருந்தது. தற்போது அரசு சிவகங்கை, இராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் நகர் ஊரமைப்பு அலுவலகம் தொடங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இதையடுத்து இராமநாதபுரம் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் 177/7-தேவிப்பட்டிணம் ரோடு, பேங்க் ஆப் பரோடா மாடி, இரண்டாவது தளம், கேணிக்கரை, இராமநாதபுரம்-623 504 என்ற முகவரியில் புதிய அலுவலகம் 17.07.2020 அன்று திறக்கப்பட்டு செயல்பட தொடங்கியுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்தவர்கள் வீட்டுமனை மற்றும் கட்டிடங்களுக்கான அனுமதி பெறுவதற்கு மேற்குறிப்பிட்ட அலுவலகத்தில் விண்ணப்பித்து பொதுமக்கள் பயன்பெறலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**